# எப்படி ஜெபிக்க வேண்டும்?


ஆசிரியர்

**Dr. கிளிபோர்டு குமார்**

பதிப்பாசிரியர்

**எஸ். தாயப்பன்**


"இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்"

- 1 தெச. 5:17

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# எப்படி ஜெபிக்க வேண்டும்?

ஆசிரியர்

டாக்டர் கிளிபோர்டு குமார்

பதிப்பாசிரியர்

எஸ்.தாயப்பன்

நன்கொடை: ரூ. 2.50

# எப்படி ஜெபிக்க வேண்டும்?

"ஆண்டவரே எங்களுக்கு ஜெபிக்க கற்றுத் தாரும்" என்று சீஷர்கள் கர்த்தரிடம் கேட்டார்கள். கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த ஆலோசனைகள் அநேகம். விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும் - மாற் 11:23, 24. மன்னித்து ஜெபிக்க வேண்டும் - மாற் 11:25, 26. இப்படி அநேக ஆலோசனைகளை கர்த்தர் பல விதங்களில் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். அப்படியே கர்த்தர் எனக்கு கொடுத்த சில அனுபவங்களையும், ஆலோசனைகளையும் உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும்படியாக இதில் எழுதியிருக்கிறேன். **மனப்பாடம் பண்ணிக் கொண்டு ஏனோ தானோ என்று ஜெபிக்காமல் உணர்ந்து ஜெபியுங்கள்.**

ஜெபத்தினால் ஜெயம் பெற்ற ஆயிரக்கணக்கான அனுபவங்களை பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்த நாளிலும் ஜெபம் கேட்கப்படுகிறதா? என்று அநேகர் சந்தேகத்தோடு கேட்பீர்கள். சில வருடங்களுக்கு முன்

நடந்த ஒரு சம்பவத்தை இன்றும் கர்த்தர் ஜெபத்தைக் கேட்கிறார் என்பதற்கு உதாரணமாக எழுதுகிறேன்.

'பூமியிலே இரண்டு பேர் ஒருமனப்பட்டு எதைக் கேட்டுக் கொள்கிறார்களோ அது பரலோகத்தில் கேட்கப்படும்' என்று வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (மத் 18:19,20) சில வருடங்களுக்கு முன்னதாக திருக்கோயிலூர் ஏ.ஜி. போதகர் அருள்தாஸிடமிருந்து ஒரு அவசர போன் கால் வந்தது. திருக்கோயிலூரில் எங்களுடைய கட்டிட வளாகத்தில் சபையைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஒரு லட்சம் ரூபாய் அன்று மாலைக்குள் கிடைத்தால்தான் தொடர்ந்து வேலை செய்ய முடியும். உதவியாயிருந்த சகோ. ஆல்பிரட் ஸ்டீபனும் இதற்கு மேல் உதவி செய்யும் நிலையிலில்லை. என்னிடமும் பணம் இல்லை. வேலை நின்று விட்டது என்று சொன்னார். நான் உடனே ஜெபியுங்கள் பாஸ்டர். கர்த்தர் உடனே கொடுப்பார் என்று சொன்னேன். அன்றைய தினம் என்னிடம் நாலாயிரம் ரூபாய்தான் இருந்தது. போனிலேயே போதகரோடு சேர்ந்து நானும் ஜெபித்தேன். ஆண்டவரே ஒரு லட்சம் ரூபாய் உடனே வேண்டும் என்றேன்.

ஒரு இரண்டு மணி நேரம் கழித்து எல்சி என்ற சகோதரியிடமிருந்து எத்தனையோ வருடங்கள் கழித்து ஒரு போன் கால் வந்தது. உங்களுக்கு தெரிந்த யாராவது ஆலயம் கட்டுகிறார்களா? என்று கேட்டார்கள். ஏன் என்ன நடந்தது? சர்ச் விஷயமாய் கேட்கிறாயே என்று கேட்டேன். விமானப் பணியில் இருந்த அந்த மகள் வியாதிப்பட்டு பணிக்கு செல்ல முடியாத நிலைமை ஆகிவிட்டது. சுகமடைந்த பிறகு விமானத்தில் வேலை செய்யக் கூடாது. அலுவலகத்தில் வேலை செய்யலாம். உன் சரீரம் விமானத்தில் பணி செய்ய தகுதியில்லை என்று சொல்லி விட்டார்கள். அந்த மகள் அடிக்கடி வெளி தேசத்திற்கு செல்பவர்கள், விசனப்பட்டு வேலைக்குப் போகாதிருந்த பொழுது ஜெபிக்க வந்த ஒரு தாய் ஆலயம் கட்ட ஒரு லட்சம் ரூபாய் தருவேன் என்று பொருத்தனை செய்து ஜெபி. கர்த்தர் உனக்கு உதவி செய்வார் என்று சொல்லிவிட்டு போய்விட்டார்கள். உடனே அவர்கள் நாகர்கோயிலில் இருக்கிற பெரிய சபைக்கு போன் செய்து எங்கேயாவது ஆலயம் கட்டுமிடத்தை கூறுங்கள். நான் ஒரு லட்சம் ரூபாய் அனுப்புகிறேன் என்று கேட்டார்கள். நீங்கள் பணத்தை

அனுப்புங்கள். நாங்கள் எங்கேயாவது பின்னாலே கொடுப்போம் என்று கூறினார்களாம். இவர்களுக்கோ விமானத்தில் ஏற உத்தரவு வந்துவிட்டது. அவர்களு டைய பணம் ஆலயத்திற்கு போய் சேர வேண்டும் என்று அவசரப்பட்டார்கள். ஆகையால்தான் என்னை தொடர்பு கொண்டார்கள். நான் சிரித்துக் கொண்டே சொன்னேன். எல்சி சரியான நேரத்தில் கர்த்தர் எங்கள் ஜெபத்தைக் கேட்டார் என்று பாஸ்டர் அருள்தாஸ் ஆலயம் கட்டுவதைப் பற்றி விளக்கிச் சொன்னேன். அந்த மகள் நான் உடனே அனுப்புகிறேன் என்று சொல்லி அவசரப்பட்டார்கள். நான் சொன்னேன். பணத்தை எனக்கு அனுப்ப வேண்டாம். ஏ.ஜி. சபை ஸ்தாபனத்திற்கு அனுப்பும்படி விலாசத்தைக் கொடுத்தேன். பணம் வந்து, ஆலயம் கட்ட வேண்டிய இடத்திற்குப் போய் சேர்ந்தது. வேலையும் தடையில் லாதபடிக்கு நடைபெற்றது. ஒரு எளிய ஜெபம்தான். **பெரிய கர்த்தர்** இதைக் கேட்கிறார். விசுவாசத்தோடு இருதயத்தை ஊற்றி ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் ஜெபத்திற்கு கண்டிப்பாக பதில் கொடுப்பார்.

இனி உலகத்தையே ஆட்டிப் படைத்த ஓர் சம்பவத்தை **ஜெபம் எப்படி மாற்றியமைத்தது** என்று பார்ப்போமா?

இரண்டாம் உலகப் போரில் பாதி உலகத்தையே ஆண்டு கொண்டிருந்த பிரிட்டிஷ் தேசமும், ஐரோப்பிய தேசங்களும் ஹிட்லர், முசோலினி இவர்களின் கொடுமையால் தோல்வியை சந்திக்கும் பொழுது நடந்த ஒரு ஜெபத்தை குறிப்பிடுகிறேன். நார்மண்டி லேண்டிங் என்பதுதான் இந்த யுத்தத்தின் பெயர். அமெரிக்காவில் இருந்து ஏராளமான கடற்படையை **Normandy** என்ற கடற்கரைக்கு அனுப்பினார்கள்.

அதே நேரத்தில் ஏராளமான யுத்த விமானங் களையும் அமெரிக்காவில் இருந்து இங்கிலாந்து தேசத்திற்கு அனுப்பினார்கள். அன்று ரேடார் போன்ற நவீன கருவிகள் எதுவும் கிடையாது. அப்பொழுது அமெரிக்காவில் இராணுவ மந்திரியாக இருந்த ஐஸ்ஸன் ஹோவர் கலக்கத்துடன் (பின்னர் அமெரிக்க ஜனாதிபதியாக வந்தவர்) **அந்த விமான தளத்தில் தரையில் முழங்காலிட்டு ஜெபித்து அந்த விமானிகளை அனுப்பினார்.**

ஹிட்லரின் கொடுமையான தாக்குதல் இருந்த நேரம் அது. ஏறக்குறைய அவர்கள் அனுப்பிய விமானங்கள் எல்லாம் இங்கிலாந்து தேசம் போய்

சேர்ந்தது. ஆனால் கடற்படை தேசத்திற்குள் நுழைந்து ஜெர்மனியை நோக்கி போக வழியில்லாமல் இருந்தது. காரணம் அவர்கள் வைத்திருந்த தாக்குதல் படகு தரையிலும் ஓடக் கூடியவைகள். அதற்கு கடல் பொங்கி வரவேண்டும். பௌர்ணமி அன்றுதான் கடல் பொங்கும். அதற்குள் ஹிட்லரின் விமானப் படைகள் – இந்த கப்பற் படைகள் மேல் வந்து தாக்கி விடுவார்கள். ஆகையால் பிரிட்டிஷ் அரசு கொடுத்த ஆலோசனையின்படி அவர்கள் ஆதிக்கம் பண்ணின எல்லா தேசங்களிலும் கோயில்களில் மணி அடித்து இந்தியாவும் சேர்ந்து ஜெபித்தார்கள். அதே நேரத்தில், அமெரிக்காவிலும் ஆலயம் திறக்கப்பட்டு எல்லோரும் ஜெபித்தார்கள். கர்த்தர் அற்புதம் செய்தார்! எதிர்பாராமல் கடல் பொங்கினது. **அதிசயமாக இவர்கள் Normandy தேசத்தில் பிரவேசித்தார்கள்.**

இங்கிலாந்தில் இருந்து விமானப் படையும் வந்து தாக்குதல் நடத்தியது. ஐரோப்பா முழுவதும் ஹிட்லர் கைக்குள் அடங்கியிருந்த போதிலும் தெய்வ பயமில்லாத ரஷ்யாவும் இந்த ஐக்கிய நாட்டுக் கூட்டணிக்கு ஒத்தாசையாக வந்தது. **யுத்தத்தின் முடிவிற்கு ஆரம்பம் இந்த ஜெபங்கள் தான்.** ஜெபத்தினால் எதையும்

சாதிக்கலாம். உலக சரித்திரத்திலே காயீன் முதல் இன்றுவரை ஜீவிக்கிற அநேக ஜெபவீரர்கள் உலக சரித்திரத்தையே மாற்றியிருக்கிறார்கள். நீங்களும் அப்படி மாற தொடர்ந்து பயபக்தியோடு படியுங்கள், ஜெபியுங்கள். வாழ்வில் ஜெபத்திற்கு முதலிடம் கொடுங்கள்.

ஜெப பழக்கம்

**காலையில்** படுக்கையில் தூக்க மயக்கத்திலேயே எழுந்திருக்கும்போது கூடுமானால், முழங்காலிட்டு 'கிருபையின் ஆண்டவரே இந்த **இன்ப நாளுக்காக** உமக்கு ஸ்தோத்திரம். இந்த நாளுக்கு வேண்டிய பரிசுத்தத்தையும் விசுவாசத்தையும் ஆவியின் கனிகளையும், ஆவியின் வரங்களையும், சாட்சியின் ஜீவியத்தையும் வசனத்தைக் குறித்த வைராக்கியத்தையும் அடிமைக்கு கட்டளையிடும்' என்று ஜெபியுங்கள்.

பின்பு பல் துலக்கி கொஞ்சம் டீயும் குடித்துக் கொள்ளுங்களேன். அதன்பிறகு ஆயத்தமாகி கீழே குறிப்பிட்ட வசனங்களை மனப்பாடம் செய்து உணர்ந்து ஜெபமாய் சொல்லுங்கள். இந்த ஜெபத்தின் மூலமாய் வனாந்திரத்தைப் போன்ற சூழ்நிலையில் நான் அநேக

ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறேன். என்னுடைய ஜெபத்திற்கு பதில் கொடுத்த தேவன் உங்கள் ஜெபத்திற்கும் கண்டிப்பாக பதில் கொடுப்பார். நீங்கள் ஜெபித்து அவரிடமிருந்து சகல ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார்.

சங்கீதக்காரன் எப்படி தேவனை நோக்கி, வாஞ் சித்து, இருதயத்தை ஊற்றி, உருகி உருகி ஜெபித் திருக்கிறான் பாருங்கள். இதேபோல உருகி வாஞ் சித்து ஜெபியுங்கள்.

**சங் 63:1–8 ''தேவனே நீர் என்னுடைய தேவன்;** அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது. என் மாம்ச மானது உம்மை வாஞ்சிக்கிறது.

இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப் பார்க்க ஆசையாயிருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன்.

ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது. என் உதடுகள் உம்மைத் துதிக்கும்.

என் ஜீவனுள்ள மட்டும் நான் உம்மை துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன்.

நிணத்தையும் கொழுப்பையும் உண்டதுபோல் என் ஆத்துமா திருப்தியாகும்; என் வாய் ஆனந்தக் களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும்.

'என் படுக்கையின் மேல் நான் உம்மை நினைக்கும் போது இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன்.

நீர் எனக்குத் துணையாயிருந்ததினால், உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன்.

என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து பற்றிக் கொண்டிருக்கிறது. உமது வலது கரம் என்னைத் தாங்குகிறது.

**சங் 59:16,17** 'நானோ உம்முடைய வல்லமை யைப்பாடி காலையிலே உம்முடைய கிருபையை மகிழ்ச்சியோடு, புகழுவேன். எனக்கு நெருக்க முண்டான நாளிலே நீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர். என் பெலனே, உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன். தேவன் எனக்கு உயர்ந்த அடைக்கலமும், கிருபையுள்ள என் தேவனுமாயிருக்கிறார்.''

**சங் 62:11–12** ‘தேவன் ஒரு தரம் விளம்பினார். இரண்டு தரம் கேட்டிருக்கிறேன்; வல்லமை தேவனு டையது என்பதே.

கிருபையும் உம்முடையது. ஆண்டவரே! தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்கதாய்ப் பலனளிக்கிறீர்.

**சங் 62:6–8 ‘என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும்.** அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்; நான் அசைக்கப்படுவதில்லை. பெலனான என் கன்மலையும் என் அடைக்கலமும் தேவனுக்குள் இருக்கிறது.

ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள். அவர் சமூகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றி விடுங்கள். தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்.’’

அதன்பிறகு **முழங்காலிட்டு ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபின் தேவனே** எங்கள் முற்பிதாக்களை ஆசீர்வதித்து வழிநடத்தினதுபோல் எங்களையும் ஆசீர்வதித்து வழி நடத்துவீராக. இஸ்ரவேல் காக்கப்படு வதாக. உம்மை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக என்று சொன்னீரே (சங் 122:6) என்று ஜெபியுங்கள்.

அதன்பின்பு மோசேயோடு கூட இருந்து எகிப்தின் மந்திரவாதிகளின் கூரை உடைத்த தேவனே எங்களோடு இருந்து எங்களுக்கு விரோதமாய் உருவாக்கப்படும் ஆயுதங்களையும், மந்திரக் கட்டு களையும் வாய்க்காமல் செய்வீராக.

அடுத்தது யோசுவாவேடிருந்து எரிகோவின் மதிலை துதியினால் தகர்த்தவரே, எங்களுக்கு விரோதமாய் உருவாக்கப்படும் சட்ட திட்டங்களைத் தகர்த்துப் போடுவீராக.

எலியாவோடிருந்து கர்த்தரே தெய்வம் என்று நிரூபித்தீரே அந்த கிருபையை எங்களுக்குத் தாரும். எலிசாவோடு இருந்து இரட்டத்தனையான வரங்களைத் தந்தீரே. உம்முடைய நாமம் மகிமைப்படும்படி இதை எங்கள் மூலமாக செய்வீராக.

''மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும், செய்வான்'' (யோவா 14:12) என்று சொன்னீரே. உமது

நாமம் புகழ்ச்சியடையும்படியாக மாத்திரம் இதைச் செய்வீராக.

தாவீதின் குமாரனே, தாவீதைத் தெரிந்து கொண்டு அவனை வரங்களால் நிரப்பி அவனை உயர்த்தி அவன் பாவங்களையும் **மன்னித்தீரே.** அவை எல்லாவற்றையும் எங்களுக்கும் செய்வீராக.

எசேக்கியா இராஜாவோடு இருந்து அவன் ஜெபத்தைக் கேட்டு அவனை (2 இராஜா 20:5) **மரண வியாதியிலிருந்து** காப்பாற்றினீரே. எங்களுக்கும் (யார் யாருக்கு ஜெபிக்க வேண்டுமோ, அவர்களின் பெயர்களை சொல்லி விடுங்கள்) அதையே செய்வீராக.

இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சதா காலங் களிலும் உங்களோடிருக்கிறேன் என்று வாக்களித்த எங்கள் தேவனே எங்களோடு இரும். (உங்கள் குடும்ப நபர்களையும் யார் யார் ஜெபிக்க கேட்டுக் கொண்டார்களோ அவர்களின் பெயர்களையும் சொல்லி ஜெபியுங்கள். நான் நம்மையும், பல தேசங்களிலுள்ள நபர்களையும் ஒரு பட்டியலாக வைத்திருக்கிறேன்)

**தொடர்ந்து கர்த்தாவே பிசாசிற்கும், அவன் செய்கை எல்லாவற்றிற்கும், அவன் ஆடம்பரம் எல்லாவற்றிற்கும்**

நாங்கள் விலகியிருக்கும்படிக்கு பரிசுத்த ஆவியால் யோவான் 16:8இன் படி துணை நில்லும்.

**வேத தியானம் – இது முக்கியம்**

வேதத்தை தியானிக்க:

**''வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்கு கிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது''** (நீதி 28:9)

'இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக் கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது'' (வெளி 1:2)

**இவைகளுக்குப்** பிறகு நீங்கள் வாசிக்கிற வேத பாடத்தை வாசித்துவிட்டு மீண்டும் முழங்காலிட்டு (ஒருவேளை அவசியமிருந்தால் காலை உணவு அருந்திவிட்டு)

'பத்து கட்டளைகள்' (இது முக்கியம்). ஆண்டவரே, நீர் கொடுத்துள்ள பத்து கட்டளைகளையும் என் வாழ்வில் நான் ஒருபோதும் மறவாது கடைப்பிடித்து நடக்க எனக்கு உதவி செய்யும் என ஜெபியுங்கள். நீங்கள் நன்றாய் இருப்பதற்கு... கர்த்தர் உரைப்ப தாவது (மாற் 20:1–17)

1. ‘உன் தேவனாகிய கர்த்தர் நானே, என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.
2. சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் உண்டாக்கவோ, சேவிக்கவோ வேண்டாம்.
3. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.
4. ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக.
5. உன் ஆயுசு நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும், தாயையும் கனம் பண்ணுவாயாக.
6. கொலை செய்யாதிருப்பாயாக.
7. விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.
8. களவு செய்யாதிருப்பாயாக.
9. பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக.
10. பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக.

தொடர்ந்து ஜெப நிலையில் யோக 1:9 'பலங் கொண்டு திடமனதாயிரு. திகையாதே. கலங்காதே. நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்.'

கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இது முதற் கொண்டு என்றைக்குங் காப்பார்' சங் 121:8 என கூறியுள்ளீரே. அதுபோல் என் போக்கையும் வரத்தையும் பாதுகாத்தருளும்.

அதன் பிறகு சங் 119:92 '**உமது வேதம் என் மன மகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன்.**''

தொடர்ந்து பாவ அறிக்கையாக சங் 51:10–16 வரை முழங்காலில் நின்று சொல்லி ஜெபியுங்கள்.

''தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும். நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.

உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்.

உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தை திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்.

அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதே சிப்பேன். பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்.

தேவனே, என்னை இரட்சிக்கும் தேவனே, இரத்தப் பழிகளுக்கு என்னை நீங்கலாக்கி விடும். அப்பொழுது என் நாவு உம்முடைய நீதியைக் கெம்பீரமாகப் பாடும்.

ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும். அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.

பலியை நீர் விரும்புகிறதில்லை. விரும்பினால் செலுத்துவேன்; தகன பலியும் உமக்குப் பிரியமானதல்ல.

தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங் குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். அப்பேர்ப்பட்ட ஒரு இருதயத்தை எனக்குத் தாரும்.

**வாக்குத்தத்த ஜெபம்**

சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மை செய்யும். எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக’

என்று சொல்லி எங்கள் வாழ்க்கையின் மதிலையும் கட்டுவீராக என்று ஜெபித்து முடியுங்கள்.

## மறை பொருளை அறிந்து கொள்ள ஜெபம்

எரேமி 33:3 'என்னை நோக்கிக் கூப்பிடு. அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்' வெளிப்பாடு வேண்டுமென்றால் இந்த வசன ஜெபம் தேவை. கர்த்தரிடம் வசனத்தைக் கூறி ஜெபித்துக் கேளுங்கள்.

## விசுவாசத்திற்கான ஜெபம்

லூக் 17:5.6 'அப்பொழுது அப்போஸ்தலர் கர்த்தரை நோக்கி எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ண வேண்டும்' என்றார்கள்.

அதற்குக் கர்த்தர்: 'கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்தி மரத்தை நோக்கி நீ வேரோடே பிடுங் குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்' (கேன்சர் வியாதியுள்ளவர்களுக்கு இந்த வசனம் முக்கியமானது)

தொடர்ந்து மாற் 16:17, 18 'விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே, பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள்.

சர்ப்பங்களை எடுப்பார்கள், சாவுக்கேதுவான, யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது, வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்' எங்களுக்கு இந்த வரம் தாரும் என்று ஜெபியுங்கள்.

மத் 16:7,8 'போகையில், பரலோக ராஜ்யம் சமீபித் திருக்கிறது என்று பிரசங்கியுங்கள்.

வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள். குஷ்டரோகிகளைச் சுத்தம் பண்ணுங்கள். மரித்தோரை எழுப்புங்கள். பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்.'

ஏசா 53:4, 5 'மெய்யாகவே அவர் நம்முடைய பாடு களை ஏற்றுக் கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; **நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் (கர்த்தர் மேல்) வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்'** என்றும் ஜெபியுங்கள்.

யோசுவா 1:8 'இந்த நியாயப் பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம், நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக. அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய். அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்.'

மாற்கு 11:23,24 'எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஆதலால், நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப்

பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்' – ஆண்டவரே நிரூபியும்!

**அதன்பிறகு** லூக் 10:19 **அதிகாரத்தோடு இதைச் சொல்லுங்கள்.** 'இதோ, சர்ப்பங்களையும், தேள் களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது' என்று சொன்னீரே. அந்த அதிகாரத்தை எனக்குத் தாருங்கள்.

**கர்த்தரின் சந்நிதானத்தில் எட்டும் ஜெபம்**

கொர்நேலியுவின் ஜெபத்தை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். கொரநேலியு யார் என்று வேதம் நமக்கு விளக்கம் சொல்லவில்லை. லூக் 23:47இல் கர்த்தர் பிதாவே என் ஆவியை உம்முடைய கைகளில் ஒப்புவிக்கிறேன் என்று சொன்னபோது, இந்த இயேசுவைக் குறித்து மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தால், இருந்தான் என்று சொல்லி, வேதனை மகிமைப்படுத்தினான்'. அந்த நூற்றுக்கதிபதியாகத்தான் இருக்க வேண்டும் என்பது

என் கருத்து. அவன் தன் குடும்பத்தோடு தேவ பக்தியுள்ளவன், தான தர்மம் செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

மற்றும் ஒரு காரியம் உண்டு. தேவனுக்கு பிரியமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். தானி 9:23இல் 'நீ மிகவும் பிரியமானவன்' 'மத் 3:17இல் 'இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமா யிருக்கிறேன்'. இந்த வார்த்தைகள் இயேசு கிறிஸ்து மூலமாய் நமக்குச் சொந்தமாகும். அந்த கிருபை நமக்குக் கிடைக்க ஜெபியுங்கள். ஜெபத்தோடும், பெருமூச்சோடும்தான் இதை எழுதுகிறேன். மற்றொரு ஜெபத்தையும் சொல்லுகிறேன்.

**பிசாசையும். சூனியங்களையும் ஜெயிக்கிற ஜெபம்**

1 யோவா 5:18 **'தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யானென்று அறிந்திருக்கிறோம். தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்' –'ஆகையால் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்**

போவான்' – யாக் 4:7. 'பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்' – எபேசி 4:27. 'உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய். இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்திரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்' – ஏசா 54:17.

'கர்த்தரின் விரல் உங்களையும், நமக்கு உண்டான யாவையும் காக்கும்படிக்கு...' யாத் 8:19. 'அப்பொழுது மந்திரவாதிகள் பார்வோனை நோக்கி இது தேவனுடைய விரல்' என்றார்கள். ஆனாலும், கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனுடைய இருதயம் கடினப்பட்டது. அவர்களுக்குச் செவிகொடாமற் போனான். 'மேலும் சாத்தான் நெருங்கத்தான் செய்வான். தொல்லை கொடுக்கவும் அணுகுவான், 'அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல், நான் விட்டு வந்த என் வீட்டுக்குத் திரும்பிப் போவேன் என்று சொல்லி,

**அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக் கண்டு...'** (மாத் 12:43, 44)

விளக்கம் – நம்முடைய ஆத்துமாவாகிய வீடு பெருக்கி (அனுதினமும் செய்கிற ஜெபங்கள் ஜோடிக் கப்பட்டதாயும், மாய்மாலமாகவும், பாரம்பரியமாகவும், இருந்து விட்டு ஆண்டவராகிய இயேசுவின் அன்பு நம்முடைய இருதயத்தில் இல்லாமல் வெறுமையாய் இருக்குமானால், அவன் மீண்டும் ஏழு பிசாசுகளோடு திரும்ப வருவான். ஆகையால் இருதயம் வெறுமையாய் இருக்கக் கூடாது. **கர்த்தரோடும் அவர் கொடுத்த கற்பனைகளோடும், ஆவியின் கனிகளாலும், நிரம்பியிருக்க வேண்டுமென்று ஜெபித்து அவனை எதிர்த்து நிற்க வரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.** நெடுங்காலமாய் ஜெபிக்கிற வேதம் வாசிக்கிற கர்த்தருடைய பிள்ளைகளையும், அவன் வேதனைப்படுத்துவதையும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவன் நம்மை அணுகாதபடிக்கு நம்முடைய மீட்பர் இயேசு சொன்ன யோவா 14:30 **'இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை'. 'இந்த உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு**

என்னிடத்தில் ஒன்றுமில்லை' என்று அதைப் பிடித்து அவனுக்கு எதிர்த்து நின்று துரத்துங்கள். மற்றும் ஒரு ஜெபத்தை ஞாபகப்படுத்தி முடிக்கிறேன்.

மன்னிப்பு ஜெபம்

கர்த்தரே இதைச் சொன்னபடியினாலே இதை முக்கியமாய் எழுதுகிறேன். மத் 5:23,24 'ஆகையால் நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில், அங்கே தானே பலி பீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து' மற்றும் மாற் 11:25,26இல் நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, 'ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டா யிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்றார்.'

இவையெல்லாம் என் அனுபவங்களில் நான் கண்டபடியால் நடக்காது, முடியாது, இல்லை என்கிற அநேக சூழ்நிலைகளிலே என் ஆத்தும மீட்பர் இந்த 84 வயதுடைய என்னையும் தாங்கி நடத்தினார். ஒரு ஸ்தாபனத்தையோ, அல்லது விளம்பரத்தையோ எனக்கென்று ஏற்படுத்தாதபடிக்கு அவர் வார்த்தையை மாத்திரமே நம்பி நின்றேன். இப்படிப்பட்ட அனுபவத்திற்கு, எல்லோரும் வரவேண்டுமென்று சொல்லி ஏக்கத்தோடு இதை ஆயத்தப்படுத்துகிறேன். கர்த்தர் மகிமைப்படுத்துவாராக.

பரமண்டல ஜெபத்திற்கு கர்த்தருடைய ஜெபம் என்பார்கள். ஆனால் அநேக பெந்தேகோஸ்தே சபைகளில் இதை உபயோகப்படுத்துவதில்லை. இதை மாதிரி ஜெபம் என்று சொல்லுவார்கள். **பரமண்டல ஜெபமும் பத்து கட்டளையும் பிசாசை நடுங்க வைக்கும் என்பது அநேகருக்கு தெரிவதில்லை.** நான் மேற்கூறிய எல்லா ஜெபங்களையும் நீங்கள் செய்து முடித்த பிறகு கைகளை உயர்த்தி பரமண்டல ஜெபத்தையும் அர்த்தத்தோடு நிறுத்தி சொல்லுங்கள். கர்த்தர் உங்களை எல்லாத் தீமையிலிருந்தும் இரட்சிப்பார். அல்லேலூயா.

கர்த்தரின் ஜெபம்

மத் 6:9–13 'பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.

அன்றன்று வேண்டிய ஆகாரத்தை இன்றும் எங்களுக்குத் தாரும் (மத் 6:11, லூக் 11:3)

எங்களுக்கு விரோதமாய் குற்றஞ் செய்பவர்களை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் பாவ குற்றங்களை எங்களுக்கு மன்னியும் (ப)

எங்களை சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

இடையில் கிருபை நிறைந்த பாடல்களை, நீங்கள் தனியாகப் பாடிக் கர்த்தரைத் துதியுங்கள், கூப்பிடுங்கள். ஆமென்.

கர்த்தர் எந்த நிலையிலும், எந்த ஜெபத்தையும் கேட்டு பதிலளிக்கிறவர் என்பதற்கு சில வசனங்களை மாத்திரம் குறிப்பிடுகிறேன்.

1. மன்னிப்பு ஜெபம் (ஆதி 4:12–14, மாற் 11:25, 26)
2. உரிமை ஜெபம் (ஆதி 17:2)
3. பொருத்தனை ஜெபம் (1 சாமு 1:11)
4. அவசர ஜெபம் (மத் 14:30)
5. விடுதலையின் வெற்றி ஜெபம் (லூக் 23:42)
6. (a) அவிசுவாச ஜெபம் (மாற் 9;22, பதில் 9:23)

   (b) விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ண ஜெபம் (லூக் 17:5,6)
7. வைராக்கிய ஜெபம் (மத் 17:21, தானி 6:3)
8. உபவாச ஜெபம் (மத் 17:21, தானி 9:3)
9. பாடல் ஜெபம் (சங் 57ன் தலைப்பு மற்றும் சங்கீதங்கள், அப் 16:25)

10 சித்தத்தின்படி ஜெபம் (மத் 25:39)

11. கர்த்தரின் வல்லமையை அறிய பிரகாசமுள்ள மனக்கண்களை கர்த்தர் தரும்படி ஜெபம் (எபேசி 1:10)

12. நினைப்பூட்டி ஜெபிக்கும் ஜெபம் (2 இராஜா 20:3, நியா 16:26)

பிசாசு கூட மூன்று முறை ஜெபித்து பதில் வாங்கிக் கொண்டது உங்களுக்குத் தெரியுமா? (லூக் 8:28, 31, 32)

தினம் மூன்று முறை ஜெபிப்பதின் முக்கியத்தை கற்றுக் கொள்ளுங்கள். மற்றும் ஒரு உலக சம்பவத்தை சொல்லி முடிக்கிறேன். (தானி 6:10, மத் 26:44, சங் 55:17)

ஹங்கேரி தேசத்தைச் சேர்ந்த மிஷனரி ரிச்சர்டு உம்பிராண்ட் என்பவர் இரண்டாவது உலக மகா யுத்தத்தில் கைது செய்யப்பட்டு கம்யூனிஸ சிறையில் இருந்தவர். கொடூர சிறையில் இருந்து அநேக காரியங்களுக்காக ஜெபித்து வெற்றி பெற்றவர், விடுதலையாகி வெளியே வந்து ஊழியம் செய்தவர். அவருடைய ஜெபக் குறிப்பில் முக்கியமான ஜெபக் குறிப்பு கிழக்கு ஜெர்மனிக்கும், மேற்கு ஜெர்மனிக்கும்

இடையே இருந்த பெர்லின் சுவர் இடிக்கப்பட வேண்டும் என்பதே மேற்கு ஜெர்மனியையும், கம்யூனிச கிழக்கு ஜெர்மனியையும் அந்த சுவர் பிரித்து வைத்திருந்தது. அந்த சுவர் உடைக்கப்பட உலகம் முழுவதும் ஜெபத்தை ஒழுங்கு செய்தார்.

இந்தியாவிலும் சென்னையில், அந்த சுவர் உடைவதற்காக எத்தனைபேர் இதற்காக ஜெபிப்பீர்கள் என கரம் உயர்த்தச் சொன்னார் சகோ. சாம் ஜெபத்துரை. வாலிபனாக அந்த ஊழியத்திற்கு அவர் மிகவும் ஆர்வம் காட்டினார். அவருடைய மூத்த மகளுக்கு ரிச்சர்டு உம்பிராண்டுவின் மனைவியின் பெயரை சபீனா என்று வைத்தார். என் மனைவி டாக்டர் ஹெலனும் அந்த சுவரை உடைப்பதற்காக ஜெபிப்பேன் என்று வாக்கு கொடுத்தாள். நீங்கள் இங்கிருந்து ஜெபம் பண்ணி சுவரை உடைத்து விடுவீர்களா? என்று அப்பொழுது பரியாசம் செய்தேன்.

சில காலம் கழித்து நானும் இரட்சிக்கப்பட்டு என் மனைவி சொல்லும் ஜெபக் குறிப்பை கேட்டு நானும் சிரித்துக் கொண்டே ஜெபிப்பேன். சுவற்றின் கற்களை கையில் எடுத்துப் பார்ப்பேன் என்று கற்பனை செய்து

ஜெபித்தேன். 1999ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் தேதியன்று **சுவர் கிழக்கு ஜெர்மனியினராலேயே உடைக்கப்பட்டது.** முதலில் கையில் அகப்பட்ட பொருள்களை வைத்து உடைக்க ஆரம்பித்தார்கள். பின்பு Bull Dozer இயந்திரம் கொண்டு உடைத்தெறிந்தார்கள். ஜெபத்திற்கு பதில் கொடுத்ததற்காக எல்லோரும் கர்த்தரை துதித்தோம். பல வருஷங்கள் பொறுத்து ஒரு மிலிட்டரி கண்காட்சியை அமெரிக்காவில் பார்க்கப் போயிருந்தேன். அதில் அந்த சுவரின் துண்டுகளை ஒரு பாதுகாப்பான இடத்தில் கண் காட்சிக்காக வைத்திருந்தார்கள். அதை காவல் காத்துக் கொண்டிருந்த பாதுகாப்பாளரிடம் நான் இதைத் தொடலாமா? என்று கேட்டேன். கூடாது என்று சொன்னான்.

இந்த சுவர் உடைய வேண்டுமென்று ஜெபித்த மனிதர்களில் நானும் ஒருவன் என்று சொன்னேன். அவன் சிறிது நேரம் தயங்கிவிட்டு நீங்கள் கிறிஸ்தவரா? என்று கேட்டான். ஆம் என்று சொன்னபோது அவன் நானும் ஒரு விசுவாசி என்று அழகான வார்த்தையை சொல்லி அந்த கற்களை என் கையில் வைத்திருக்க அனுமதித்தார். நானும் கையில் எடுத்து ஜெபித்தேன்.

அவர் எரிகோவின் மதிலை மாத்திரமல்ல. ஜெர்மனி யின் மதிலை மத்திரம் அல்ல. **நமக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதங்களையும் முறிக்கிற சேனைகளின் கர்த்தர் அவர்.** அவரைப் பிடித்துக் கொண்டு ஜெபவீரர்களாய், ஜெப வீராங்கனைகளாய் மாறுவோமாக, அல்லேலூயா!

பழைய கால சபைகளை குறை கூறினவர்களில் பெந்தேகொஸ்தே என்ற ஒரு பாரம்பரியம் உண்டாகி அபிஷேகம், கைதட்டுதல், தீர்க்கதரிசனம் உரைப்பது, இரட்சிக்கப்படாதவர் கூட) நூதனமாய் நடந்து கொள்வது எல்லாம் பாரம்பரியமாய் இருக்கிற இந்த நாட்களிலே, எப்படி ஜெபிப்பது என்று இந்த புத்தகத்தை எழுதினேன். நாற்பது வருட ஊழியங்களில் நான் கண்ட விடுதலையும், ஆசீர்வாதங்களும் சொல்லி முடியாதவை. நான் பார்த்த கொடுமையான அனுபவங்களை ஜெபத்தினால் ஜெபித்ததை என்னுடைய ‘என் கண்கள் கண்டவை, உங்கள் செவிகள் கேட்க, ஏன் எங்களால் கூடாமற் போயிற்று’ மற்றும் சில சிறு புத்தகங்களில் எழுதியிருக்கிறேன். ‘ஜெபிக்கலாமா? மலைகள் விலகட்டும்’ என்ற புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறேன். ‘இன்னும் வெளியிடவில்லை. i-

pad, facebook, what's app இப்படிப்பட்ட காரியங்களில் நேரத்தை வீணாக்காதபடிக்கு தேவ தியானத்தையும், ஜெபத்தையும் நாடும்படி ஆயத்தமாவோம்.

கடைசியாக ஜெபம் கேட்கப்படும்படிக்கு ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்று பவுல் கேட்டது போல் கேட்டு அவர் சித்தத்தை மாத்திரம் செய்தால் பவுலை உபயோகப்படுத்தினது போல் கர்த்தர் நம்மையும் உபயோகப்படுத்த முடியும். ஆமென்! ஆமென்!

**- கிளிபோர்டு குமார்**

**தே**வ பிள்ளைகளே,

சர்ப்பத்தின் ஆவியானது சபைகளுக்கு விரோதமாய், ஊழியர்களுக்கு விரோதமாய், தேவ ஜனங்களுக்கு விரோதமாய், தேசத்திற்கு விரோதமாய், இந்த உலகில் உள்ள அனைத்து மக்களையும் தொடர்ந்து பாவம் செய்ய வைத்து நரகத்துக்கு நேராய் வழி நடத்துகிறது மட்டுமல்லாமல் தேசத்தில் ஜாதி, மத, இன மொழியின் பெயரால் தீவிரவாதங்களையும்

வன்முறைகளையும் தூண்டி விட்டு, தேசத்தின் அமைதியையும் நமது இறையாண்மையையும் கெடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஆவிகளை கட்டி ஜெபிக்க வேண்டியது கிறிஸ்தவர்களின் கடமை. பெங்களூர் லிங்கராஜபுரத்தில் Jesus Ministries என்கிற ஊழியத்தை செய்து கொண்டிருக்கிற சகோ லாரன்ஸ் இதை எழுதி வெளியிட்டு இருந்தார். மிக முக்கியமான ஜெபக்குறிப்பாக இருந்தபடியால் அதையும் இப்புத்தகத்தில் இணைத்துள்ளேன்.

கொடுக்கப்பட்டுள்ள எல்லா வேத வசனங்களையும் பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு தியானித்து தினமும் ஜெபியுங்கள்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**– எஸ். தாயப்பன்**

# சர்பத்தின் ஆவி

தியானியுங்கள்: வெளி 12:9, 20:2, ஏசா 5:19, 27:1, மாற்கு 16:18, லூக்கா 10:18–19, அப் 28:3–6

1. கண்களின் இச்சையை தூண்டுகிற ஆவி - ஆதி 3:6
2. மாம்சத்தின் இச்சையை தூண்டுகிற ஆவி - ஆதி 3;6
3. பெருமையைத் தூண்டுகிற ஆவி - ஆதி 3:6
4. வஞ்சிக்கின்ற, ஏமாற்றுகின்ற ஆவி - ஆதி 3:13, 1 தீமோ 2:14, 2 கொரி 11:3.
5. கீழ்ப்படியாமையின் ஆவி - ஆதி 3:6
6. தன்வசப்படுத்துகிற ஆவி - ஆதி 3:1–6
7. கன நித்திரையின் ஆவி.
8. தேவ உறவைப் (பரிசுத்தம்) பிரிக்கிற ஆவி - ஆதி 3:1–9, 3:2,3

9. பிரிவினையின் (சபை, குடும்பம், ஊழியம்) ஆவி – ஆதி3 அதிகாரம்

10. நுரை தள்ளுகிற (அலங்கோலம், அவமானம்) ஆவி – மார்க் 9:18, ஆதி 3:10.

11. தந்திரத்தின் ஆவி, ஆதி 3:1, 2 கொரி 11:3.

12. கொல்லுகிற, அழிக்கிற, மரணத்தை உண்டாக்கும் ஆவி – உபா 32:33, யோபு 20:14

13. ஆசையை உண்டாக்கி, பாதையை மாற்றுகிற ஆவி – ஆதி 3:1

14. விபச்சாரத்தின் ஆவி, வேசித்தனத்தின் ஆவி.

15. கற்பழிக்கிற ஆவி, கற்பை இழந்து போகப் பண்ணுகிற ஆவி.

16. அந்தி கிறிஸ்துவின் ஆவி – வெளி 12:9

17. பொய் சொல்லுகிற ஆவி – ஆதி 3:3–4, யோவான் 8:44

18. பொறாமையின் ஆவி.

19. கோபத்தின் ஆவி – ஆதி 4:6

20. மாய வித்தையின் ஆவி - யாத் 7:12.

21. பாவத்திற்கு அடிமைப்படுத்துகிற ஆவி

22. பண ஆசை, பொருளாசையைத் தூண்டுகிற ஆவி

23. திருடுகிற ஆவி - யோவான் 10:10.

24. சிந்தை மண்டலத்தை கெடுக்கிற (கெட்ட ஆலோசனை) ஆவி- ஆதி 3:6.

25. தேவனுக்காக செயல்படாதபடிக்கு தடுக்கிற ஆவி.

26. தவறான உபதேசங்களை நம்ப வைக்கிற ஆவி - ஆதி 3:4-6.

27. நல்லவனைப் போல் நடிக்கிற ஆவி - ஆதி 3:4-5.

28. மயக்கத்தின் ஆவி

29. நல்ல ஐக்கியத்தைத் துண்டிக்கிற ஆவி - ஆதி 1, 2, 3, அதிகாரங்கள்

30. பிரகாசமான மனக்கண்களை குருடாக்குகிற ஆவி - ஆதி 3:5.

31. ஜனங்களை உயர்ந்த ஸ்தலங்களுக்கும், ஸ்தானத்திற்கும், பரலோகத்திற்கும் போகாத படிக்கு தடுக்கிற ஆவி - வெளி 12:9.

32. குறை சொல்லுகிற ஆவி - ஆதி 3:1-5.

33. ஆபாசப் படங்களையும், ஆபாசத்திலும் ஈடுபட வைக்கிற (நிர்வாணத்தை காட்டுகிற) ஆவி - ஆதி 3:1-9

34. தேவ மகிமையை இழந்து போகப் பண்ணுகிற ஆவி - ரோமர் 3:2-3, ஆதி 3:7-10.

35. குதிரை வீரனை (ஜெப வீரனை) விழ வைக்கிற ஆவி - ஆதி 49:17.

36. அநியாயம் செய்கிற (அதிகாரி, விஷம் நிறைந்தவர்கள்) - ஆவி, சங்:58:1-4.

37. (*) கொடுமைப்படுத்துகிற ஆவி - சங் 140:1-3.

(*) கொடுமைப்படுத்துகிறவனை உருவாக்கு1

கிற ஆவி - சங் 140:1-3

(*) பொல்லாப்பை சிந்தித்து அதையே செய்ய வைக்கிற ஆவி - சங் 140:1-3

(*) சண்டை போடுகின்ற ஆவி – சங் 140:1–3

38. கேள்விகளை கேட்டு மனிதனை திசை திருப்புகிற – ஆவி – ஆதி 3:1–4.

39. ஊமையின் (தேவனோடு பேசாதபடி தடுக்கிற) ஆவி – ஆதி 3:1,5

40. செவிட்டின் (சாத்தானின் சத்தம் காதுகளில் கேக்கவும், தேவ சத்தத்திற்கு செவி கொடுத்தலை தடுக்கும்) ஆவி – ஆதி 3:1–5

41. தேவனையே மறக்கப் பண்ணுகிற ஆவி – ஆதி 3:1–6

42. ஊழியர்களுக்கு விரோதமாய் எழும்பி செயல் படுகிற ஆவி – யோவான் 10:7,9,2 ஆதி 3:5.

43. கைகளை தவறான காரியங்களுக்குப் பயன்படுத்துகிற ஆவி – ஆதி 3:6

(1) கைப்பழக்கம் (2) போன் (3) இன்டர்நெட் (4) ஆணும் பெண்ணும் தவறாய் பழகுதல்

44. கெட்டதையே செய்கிற ஆவி – மத் 12:34, யோபு 20:12–18.

45. சமாதானத்தை கெடுக்கிற ஆவி - ஆதி 3:1.

46. சந்தோஷத்தையும் (மகிழ்ச்சியையும்) இளைப்பாறுதலையும் அபகரிக்கிற ஆவி - ஆதி 2:8, 3:23.

47. விசுவாசத்தை துண்டிக்கிற ஆவி - ஆதி 3:1, ரோமர் 10:17.

48. மனிதனை தெய்வ அன்பிலிருந்து பிரிக்கிற ஆவி - வெளி 2:4, ஆதி 3:23, 24.

49. பயத்தை உண்டாக்குகிற ஆவி - ஆதி 3:10.

50. சரீர அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற ஆவி - எசே 28:17.

51. ஞானத்தைக் கெடுக்கிற ஆவி - எசே 28:17.

Sundar Prints 9840199777